# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.320/2009

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 30.01.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராமன் Father's Name : சின்னசாமி

துவக்க நேரம்: 03.34P.M.

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. தாவா சொத்தை கடந்த 08.11.2005 அன்று 1-ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதி தான் கிரயம் பெற்ற சொத்தை கடந்த 24.06.2009 அன்று 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது 2, 3 பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் எனது தரப்பு ஆவணமாக(வா.சா.ஆ.2) கடந்த 24.06.2009 தேதியிட்ட கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் கிரயம் செய்து கொண்டது பற்றி எனக்கு தெரியாது.

2. நான் எனது தரப்பில் விற்கிரய உடன்படிக்கை ஆவணத்தை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ள கலியபெருமாள் எனது உறவினர் என்றால் சரியல்ல, 2-வது சாட்சி பழனியப்பன் எனக்கு மாமா உறவு என்றால் சரியல்ல, 3-வதாக சாட்சி கையொப்பமிட்டுள்ள கணபதி எனது அண்ணன்

என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருவதாக கூறியுள்ள நிலையில் அதற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வரவில்லை என்பதால்தான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ரூ.35,000/- செலவு செய்து பைப்லைன் அமைத்திருப்பதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்தில் எவ்வித பைப்லைனும் அமைக்கவில்லை என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 ஆனது தடய அறிவியல் துறைக்கு ஆய்விற்கு அனுப்பப்பட்டு அதில் உள்ள கையொப்பம் 1-ஆம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லையென அறிக்கை வழங்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நானும், கிரய உடன்படிக்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட சாட்சிகளும் திட்டமிட்டு போலியான ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. போலியான ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 03.53 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.320/2009, Dt.30.01.2026.